வரிசை எண்	மாவட்டம்	நகரம்
10	திருவள்ளூர்	திருவொற்றியூர்
11	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்
12	சேலம்	மேட்டூர்
13	திருவாரூர்	மன்னார்குடி
14	நீலகிரி	உதகமண்டலம்
15	திருச்சி	திருச்சி
16	தஞ்சாவூர்	கும்பகோணம்

மேலும், கோவை மாவட்டத்தில் சூலூர் சிறப்பு ஊராட்சியில் நாள் ஒன்றுக்கு 6 இலட்சம் லிட்டர் கழிவுநீரை மைக்ரோ என்காப்சுலேஷன் (Micro-Encopsolation) முறையில் கழிவுநீர் நுண்ணுயிர்களை உற்பத்தி செய்து அந்த நுண்ணுயிர்களே கழிவுப் பொருட்களைச் சாப்பிடும் சுத்திகரிப்பு முறைமை கொண்ட முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உதகமண்டலம் ஏரி "உயரிய தொழில்நுட்ப முறையான நுண்ணுயிரியல்" முறைமையினைக் கொண்டு புனரமைப்புகள் செய்யப்பட்டுள்ளன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

பேரவை அலுவல் நீட்டிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 21-9-2005 அன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவின்படி, 28-9-2005 அன்றுடன் முடிவுபெறுவதாக இருந்த இக்கூட்டத்தொடர், அவையின் அலுவல்கள் முற்றுப் பெறாததால் பேரவையின் அனுமதியுடன் 29-9-2005 அன்று நீட்டிக்கப்பெற்று, 28-9-2005 அன்று எடுத்துக்கொள்ளப்படவிருந்த அன்றைய அலுவல்கள் 29-9-2005 அன்று எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் (குறுக்கீடு)